**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**
**O.S.No. 102 of 2016**

நாள் 12.02.2024 P.W.1 -- வாசுகி க-பெ. திருமூர்த்தி

5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

1. பிரதிவாதிகள் 4 மற்றும் 5 ஆகியோர்களுக்கும், எங்களுக்கும் ஏதேனும் விரோதம் இருந்து வருகிறதா என்றால் இல்லை. 2010 ஆம் வருடம் என் தகப்பனார் இறந்துவிட்டார் என்றும், அதன்பிறகு ஆறு வருடங்கள் கழித்து இந்த வழக்கினை தொடர்ந்துள்ளேன் என்றால் ஆமாம். என் தகப்பனார் இறந்த பிறகு சொத்து தொடர்பாக பேசிப்பார்த்தார்கள், ஆனால் எதுவும் உடன்படவில்லை. என் அக்கா ராஜசேகரி தான் எல்லாம் பார்த்து வந்தார். அதற்கு பிறகு அவருக்கு வயதாகிவிட்டதால், நான் இந்த வழக்கில் சாட்சியமளிக்கிறேன். இவ்வழக்கின் விவரங்களை நான் கூறினேனா என் அக்கா கூறினாரா என்றால், நாங்கள் இருவரும் வழக்கறிஞரிடம் விவரங்களை கூறினோம். என் தகப்பனாரின் கரும காரியம் முடிந்தவுடன், பஞ்சாயத்தார் முன்னிலையில், என் தகப்பனாரின் பீரோவை நாங்கள் திறந்தோமா என்றால் ஆமாம். அந்த பீரோவில் புரோநோட், உயில், முப்பதாயிரம் ரொக்கம், நகைகள் ஆகியவை இருந்தன என்றால், நாங்கள் அருகே செல்லவில்லை, பஞ்சாயத்தார்கள் தான் திறந்து பார்த்து அதிலிருந்த பொருட்களை பற்றி கூறினார்கள். பஞ்சாயத்தார்கள் பெயர்களை கூற முடியுமா என்றால் என் தகப்பனாரின் தம்பி பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களின் பெயர்கள் கூற முடியுமா என்றால், வீதிவணகன் மற்றும் உமாபதி. அவர்கள் இருவரின் பெயர்கள் மட்டும் எனக்கு நினைவில் உள்ளது. மற்றவர்களின் பெயர்கள் எனக்கு நினைவில் இல்லை. உமாபதி தற்போது உயிருடன் இல்லை, இறந்துவிட்டார். அந்த சமயத்தில் சொத்துக்களை பிரித்துக்கொள்வது தொடர்பாக பேசினார்களா என்றால் பேசினார்கள். பஞ்சாயத்தார்கள், என் தகப்பனார் உயில் எழுதி வைத்தது தொடர்பாக, என்னிடம் கூறினார்களா என்றால், என்னிடம் யாரும்

சொல்லவில்லை, வேறு யாரிடமாவது உயில் உள்ள விவரத்தை பற்றி கூறினார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் பஞ்சாயத்து பேசியவர்கள், ஒரு ஏக்கர் நிலம் எனக்கும், ஒரு ஏக்கர் நிலம் என் அக்காவிற்கும், பஞ்சாயத்தில் அளித்தார்கள் என்றும், அவைகளை குத்தகைக்கு விட்டு நான் வருமானம் ஈட்டி வருகிறேன் என்றால் மறுக்கிறேன், அவ்வாறு நிலம் எதுவும் எனக்கு வழங்கவில்லை. 2010 ஆம் வருடத்திற்கு பிறகு, இந்த வழக்கு போடுவதற்கு முன்பு வரை, பிரதிவாதிகளிடம் எனக்கு பாகம் தருமாறு நான் கேட்கவில்லை என்றால் ஆமாம். பிரதிவாதிகள் 8 முதல் 12 ஆகிய நபர்களுக்கு நாங்கள் வழக்கு போடுவதற்கு முன்பு நோட்டீஸ் அனுப்பினோம் என்றால் ஆமாம், பேங்குக்கும் நோட்டீஸ் கொடுத்தோம். பிரதிவாதிகள் 1 முதல் 6 வரையிலான குடும்ப நபர்களுக்கு நாங்கள் நோட்டீஸ் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். வழக்கு சொத்துக்கள் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் ஆமாம். என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே, தனது தனிப்பட்டசொத்துக்களில் ஒரு ஏக்கரை விற்பனை செய்துவிட்டார் என்றால் ஆமாம். முதலில் இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது 3 ஏக்கர் 14 செண்ட் ( அயிட்டம் 2 முதல் 4 வரை ) என குறிப்பிட்டுவிட்டு, அதன்பின்னர் திருத்தம் செய்து 2 ஏக்கர் 14 செண்ட் என வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். என் அப்பா விற்பனை செய்த ஒரு ஏக்கரை இவ்வழக்கில் சேர்த்துவிட்டோம், அதனை சரிசெய்து 2 ஏக்கர் 14 செண்டு ஆக வழக்குரையில் திருத்தம் செய்துள்ளோம். வழக்கறிஞருக்கு இந்த சொத்து விவரங்களை யார் தெரிவித்தார்கள் என்றால், என் கணவர் வக்கீலாக இருந்தார், அவர் தான் அந்த விவரங்களை தெரிவித்தார். என் அப்பாவின் கையொப்பம் எனக்கு தெரியுமா என்றால், தற்போது சரியாக நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் 24.11.2000 தேதியிட்ட உயிலில் உள்ள கையொப்பம் என் தகப்பனாருடையதா

என்றால் எனக்கு தெரியாது. (சாட்சியிடம் 24.11.2000 தேதியிட்ட உயிலின் அசல் ஆவணத்தை காண்பித்து இவ்வினாவினை வழக்கறிஞர் தொடுத்தார்).

2. கடந்த 24.11.2000 அன்று என் தகப்பனார் ஒரு பதிவு செய்யப்பட்ட உயிலை வழக்கு சொத்துக்கள் தொடர்பாக எழுதி வைத்துள்ளார் என்றும், நான் வேண்டுமென்றே இவ்வழக்கிற்காக அதனை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த உயிலில் அடிப்படையிலேயே நானும், என் குடும்பத்தில் உள்ள மற்ற நபர்களும் சொத்துக்களை அனுபவித்து வருகின்றோம் என்றால், இல்லை. எனக்கும் என் சகோதரிக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்களை என் சகோதரியின் மகள் மூலம் தமிழ்செல்வி க-பெ. சின்னதம்பி என்பவருக்கு, நான் குத்தகைக்கு விட்டு வருவாய் ஈட்டி வருகிறேன் என்றால், சரியல்ல.

3. 6ம் பிரதிவாதி ராஜதுரை, என் தகப்பனார் எழுதி வைத்த உயில் மூலம் கிடைத்த சொத்தினையும், தனது தகப்பனாரிடமிருந்து கிடைத்த சொத்தினையும், ஒரே சக்குபந்தியில், பதினோரு ஏக்கர் முழுமையாக அனுபவித்து வருகிறார் என்றும், அவர் பெயரில் பட்டா மாற்றம் ஆகியுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் இறந்த பிறகு வழக்கு சொத்துக்கள் எந்த நிலையில் உள்ளன என்று நான் சென்று பார்த்துள்ளேனா என்றால் இல்லை. உயிலில் உள்ள சொத்துக்களை தவிர, இதர சொத்துக்கள் தொடர்பாக எனக்கு உரிய பாகம் அளிக்க தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என பிரதிவாதிகள் 4 மற்றும் 5 தெரிவித்துள்ளார்கள் என்றால் ஆமாம் அவ்வாறு தான் அவர்கள் பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள். என் தகப்பனார் எழுதி வைத்த உயில் அமலுக்கு வந்துள்ளது என்றும் அதனடிப்படையில் பிரதிவாதிகள் உரிமை கொண்டாடி சொத்தினை அனுபவித்து வருகின்றார்கள் என்றும், எனவே, அந்த உயிலுக்கு மாறாக எங்களது பாகப்பிரிவினை கோரிக்கை நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

__மறுவிசாரணை__ இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*